LIBRA
15 OCT 2005
Eastern University, Sri

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## PART II EXAMINATION IN BACHELOR OF COMMERCE 1998/ 99
## (JANUARY - 2005) EXTERNAL DEGREE (PROPER/ REPEAT)
## COM 301 MANAGEMENT ACCOUNTING

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

01 (i) முகாமைத்துவக் கணக்கியலின் தொழிற்பாடுகள் யாவை?

(03 புள்ளிகள்)

(ii) திரவத்தன்மை என்றால் என்ன? இவ் எண்ணக்கருவின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(04 புள்ளிகள்)

(iii) நிறுவனமொன்று நிதியைத் திட்டமிடும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் யாவை?

(03 புள்ளிகள்)

(iv) மூலதன இணைப்பு என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(03 புள்ளிகள்)

(v) நிறுவனமொன்று மூலதனத்தினைப் பெறுவதற்கான வெளிமூலங்கள் எவை?

(04 புள்ளிகள்)

(vi) சந்தர்ப்ப கிரயம் (அமைய கிரயம்), என்றால் என்ன? தீர்மானம் எடுத்தலில் இது எவ்வகையில் உதவுகின்றது?

(04 புள்ளிகள்)

(vii) கணக்கீட்டில் வரும் :

வரலாற்று கிரயம்

நடைமுறை கிரயம்

நடைமுறை கொள்வனவு வலு

ஆகிய எண்ணக்கருக்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(viii) ஓர் பேக்கரியில் உற்பத்தி வேலைகளில் 60%உம், ஏனைய நடவடிக்கையிலும் ஈடுபடும் ஊழியருக்கு மாதச் சம்பளமாக ரூபா. 6,000/- செலுத்தப்படுகின்றது. இவர் பாண் உற்பத்தியில் ஈடுபடும் போது ஓர் அலகு பாண் உற்பத்திக்கு ஏற்படும் நேர் ஊழியச் செலவைக் கணிக்குக.

எடுக்கப்படும் எடுகோள்களைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

(05 புள்ளிகள்)

(ix) நிறுவனமொன்றின் ஐந்தொகையில் இருந்து பின்வரும் தரவுகள் பிரித்தெடுக்கப் படுகின்றது.

| | ஆண்டு 0 (ரூ) | ஆண்டு - 6 (ரூ) | ஆண்டு - 7 (ரூ) |
|---|---|---|---|
| நிலையான சொத்து | 10,000 | 10,000 | 14,000 |
| பெறுமானத் தேய்வு | -- | 6,000 | 7,400 |
| | 10,000 | 4,000 | 6,600 |

பெறுமானத் தேய்வு - 10%

| | RPI (சில்லறை விலைச் சுட்டெண்) |
|---|---|
| ஆண்டு - 0 | 160 |
| ஆண்டு - 6 முடிவில் | 400 |
| ஆண்டு - 7 முடிவில் | 480 |
| நடு ஆண்டு - 7 | 440 |

ஆண்டு - 6ல் உள்ள நிலையான சொத்துக்கள் ஆண்டு - 0 இல் கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும். ஆண்டு- 7ல் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் 7ம் ஆண்டின் நடுப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டது.

7ம் ஆண்டின் ஆரம்ப ஐந்தொகையிலும், இறுதி ஐந்தொகையிலும் வரும் நிலையான சொத்துக்கள், பெறுமானத் தேய்வு ஆகியவற்றின் பெறுமதியை CPP முறையில் கணிக்குக.

**(05** புள்ளிகள்)

(x) விலையிடல் ஏன் அவசியமாகின்றது? வெளியக விலையிடலில் பின்பற்றப்படும் பல்வேறு முறைகளையும் விளக்குக.

(03 புள்ளிகள்)

(மொத்தம் **40** புள்ளிகள்)

அருணோதயம் நிறுவனத்தின் 2000, 2001ம் ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்குகள் கீழே தரப்பட்டுள்ளது.

31.12 இல் முடிவுற்ற ஆண்டுக்கணக்கானது

| <u>வருமானக் கூற்று</u> | 2001 (ரூ) | 2000 (ரூ) |
|---|---|---|
| விற்பனை | 690,000 | 627,000 |
| விற்பனையின் கிரயம் | 307,000 | 277,000 |
| மொத்த இலாபம் | 383,000 | 350,000 |
| நிர்வாகம் | 207,000 | 213,000 |
| ஆராய்ச்சி அபிவிருத்தி | 66,000 | 68,000 |
| செயற்பாட்டு வருமானம் | 110,000 | 69,000 |
| பிற செலவுகள் | 8,000 | 2,000 |
| வரிக்கு முந்திய இலாபம் | 102,000 | 67,000 |
| வரி | 42,000 | 29,000 |
| வரிக்கு பிந்திய தேறிய இலாபம் | 60,000 | 38,0000 |

LIBR
1 3 OCT
Eastern University, S

| ஐந்தொகை | 31.12. 2001 இல் (ரூ) | 2000 இல் (ரூ) |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து | 389,000 | 359,000 |
| இயந்திர உபகரணம் (தேறியது) | 272,000 | 249,000 |
| நீண்டகால முதலீடுகள் | 214,000 | 169,000 |
| மொத்தச் சொத்துக்கள் | 875,000 | 777,000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 253,000 | 217,000 |
| நீண்டகாலப் பொறுப்புக்கள் | 193,000 | 175,000 |
| மொத்த பொறுப்புக்கள் | 446,000 | 392,000 |
| உரிமையாண்மை | 429,000 | 385,000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 875,000 | 777,0000 |

(i) இத் தரவுகளைப் பயன்படுத்தி 2000, 2001 ஆம் ஆண்டுகளுக்குரிய :

a. திரவ விகிதங்கள்

b. உரிமையாண்மை விகிதங்கள்

c. விற்பனை விகிதங்கள்

d. இலாப விகிதங்கள் ஆகியவற்றைக் கணிப்பிடுக.

(16 புள்ளிகள்)

(ii) கணிப்பிடப்பட்ட விகிதங்களின் அடிப்படையில் 2001 ஆம் ஆண்டின் நிறுவன செயற்பாட்டை விமர்சனம் செய்க.

(02 புள்ளிகள்)

(iii) விகிதப்பகுப்பாய்வினைப் பயன்படுத்துவதில் உள்ள வரையறைகளைத் தருக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(i) மூலதனப் பாதீடு என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது?

(02 புள்ளிகள்)

(ii) மூலதனப் பாதீடு ஒன்றை தயாரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் யாவை?

(03 புள்ளிகள்)

(iii) பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி காசோட்ட முறையில் மூலதனப் பாதீட்டைத் தயாரிக்குக.

நிறுவனம் ஒன்று ரூபா. 20/- செலுத்தப்பட்ட ரூபா. 40/- பெறுமதியான 75,000 சாதாரணப் பங்குகள் மூலமும், ரூபா. 1000,000/- பெறுமதியான 10% தொகுதிக் கடன்கள் மூலமும் மூலதனத்தை திரட்டி வியாபாரத்தை ஆரம்பித்தது.

செயற்பாட்டு காலத்தில் நிறுவனத்திற்கு ஏற்படும் நிதித் தேவைகள் ரூபா. 500,000/- க்கு குறைவாயின், மேலதிகப்பற்று மூலமும், அதற்கு மேலதிகமாயின் பங்குகளில் ரூபா.10/-ஐ அழைப்பதன் மூலமும் ஈடு செய்யப்பட வேண்டுமென இயக்குனர் சபை தீர்மானித்துள்ளது. நிறுவனத்தின் தேவைக்கென ரூபா. 2000,000/-க்கு நிலையான சொத்துக்கள் முதல் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. அடுத்து வரும் 03 ஆண்டுகளிலும் ஒவ்வொரு ஆண்டிலும் ரூபா. 400,000/- பெறுமதியான மேலதிக நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டது. நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு 10% ஆகும். விற்பனையில் 25% கடன் விற்பனை ஆகும். கடன் எல்லை 03 மாதங்கள் ஆகும். விற்பனையானது வருடம் முழுவதும் சீராக நடை பெறுவதுடன் பின்வருமாறு அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

| ஆண்டு | விற்பனை (ரூ) |
|---|---|
| முதலாம் | 1200,000 |
| இரண்டாம் | 1600,000 |
| மூன்றாம் | 2000,000 |
| நான்காம் | 2400,000 |
| ஐந்தாம் | 2400,000 |

கொள்வனவுகள் விற்பனைக்காகவும் இருப்பு மட்டத்தை அவ்வாண்டு விற்பனையின் 50 வீதமாகப் பேணுவதற்குமாக மேற்கொள்ளப்படுகின்றது. கொள்வனவானது விற்பனை விலையின் அரைவாசியாகும். மேந்தலைச் செலவினம் ஒவ்வொரு ஆண்டும் ரூபா. 500,000/- ஆகும். இதில் தொகுதிக் கடன் வட்டி உள்ளடக்கப்படவில்லை. வரிகள் தேறிய இலாபத்தில் 40% இது இலாபம் ஏற்பட்ட நிதியாண்டிற்கு அடுத்த வருட இறுதியிலேயே செலுத்தப்படும். ஐந்து வருடங்களுக்குமான மூலதனப் பாதீட்டைத் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

நிறுவனம் ஒன்றிடம் மூன்று வருடத்திற்கு முன் ரூபா. 560,000/-க்கு கொள்வனவு செய்யப்பட்ட பொதி செய்யும் இயந்திரமொன்று உள்ளது. இதன் ஐந்தாவது வருட முடிவில் ரூபா. 100,000/- செலவு செய்து திருத்தி அமைப்பதன் மூலம் இதன் வாழ்வுக் காலத்தை மேலும் மூன்று வருடங்களுக்கு நீடித்து கொள்ள முடியும். இதன் இன்றைய கழிவுப் பெறுமதி ரூபா. 200,000/- ஆகவும் இன்னும் ஐந்து வருடங்களின் பின் ரூபா. 80,000/- ஆகவும் (திருத்தத்தின் பின்) இருக்கும். இதற்கான ஆண்டிற்கான இயக்கு செலவு ரூபா. 400,000/- ஆகும்.

ஓர் விற்பனை முகவர் இந்த இயந்திரத்திற்கு பதிலாக ஓர் இயந்திரத்தை ரூபா. 570,000/- அல்லது பழைய இயந்திரத்துடன் ரூபா. 310,000/- செலுத்தினால் தன்னால் வழங்க முடியும் எனக் கூறுகின்றார்.

இப் புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதன் மூலம் ஆண்டிற்கான இயக்கு செலவினத்தை ரூபா. 100,000/- ஆல் குறைக்கவும் பழைய இயந்திரத்திற்கான திருத்தங்களையும் தவிர்க்கவும் முடியும். அத்துடன் இன்றில் இருந்து 05 வருட வாழ்வு காலத்தையும் கொண்டிருக்கும். இறுதியில் கழிவு பெறுமதியாக ரூபா. 30,000/- தேறும். முதலீட்டிற்கான கழிவு வீதம் 14% எனக் கொண்டு பழைய இயந்திரத்தைப் பேணிப் பயன்படுத்துவதா அல்லது விற்பனை முகவரின் கோரிக்கைக்கு இணங்குவதா என்பதைத் தீர்மானிப்பதற்கு நிர்வாகத்திற்கு உதவும் வண்ணம் ஆதாரங்களைத் தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**

LIBRARY
13 OCT 2005
Eastern University, Sri Lanka.